# 2017
# Prize Day



**J/PUNGUDUTIVU ROMAN CATHOLIC TAMIL MIXED SCHOOL**

# J/PUNGUDUTIVU R.C.T.M.SCHOOL
# Prize Day -2017

Date: 08.12.2017 (Friday)
Time: 9.00 AM
Place: School Main Hall

Chief Guest
**Mr. L. Ilaangovan**
(Secretary to the Hon.Governor - Northern Province)

Special Guest
**Mrs. S. Krishnathas**
(Divisional Education officer -Velanai)

Guest of Honour
**Fr. S. Sebajeevan**
(Parish Priest, St. Francis Xavier's Church, Pungudutivu)

# Prize Day 2017

## The Programme

- Welcoming the Guests
- Lighting the traditional Lamp
- Prayer
- Welcome Speech
- Welcome Dance
- Message of Felicitation
- Annual Report by Principal
- Presentation of Certificates & Prize
- Address by the Special Guest
- Address by the Chief Guest
- Vote of Thanks
- Cultural Programme

**மகுடவாசகம் /MOTTO**

**உண்மையை அறிந்து உணர**

**தூர நோக்கு/VISION**

**வளமான வாழ்வை நோக்கிச் செல்லல்**

**பணிக்கூற்று /MISSION**

**சமூகத்தின் வளமான நிலைபேறிற்கு...**

✸ எழுத்தறிவு வீதத்தை உயர்வான நிலையில் பேணும் வகையில் கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை செழுமைப்படுத்தல்.

✸ அடிப்படைக் கற்றல் தேர்ச்சிகளை சிறார்கள் பெற்றுக்கொள்வதை உறுதிப்படுத்தல்.

✸ வாழ்க்கைத் திறனுக்கான அடிப்படை ஏதுநிலையை உருவாக்கல்.

✸ வாழ்வின் சவால்களை நம்பிக்கையுடன் எதிர்கொண்டு வெற்றி பெறும் மனோதிடத்தை ஏற்படுத்தும் இணைப்பாட செயற்பாடு களில் ஈடுபடுதல்

✸ தாம் வாழும் சூழலை இனங்கண்டு அதை மேம்படுத்தும் விழிப்பு ணர்வை உருவாக்கல்.

✸ சுகாதாரமான பழக்கவழக்கங்களைக் கைக்கொள்ளச் செய்வதன் மூலம் ஆரோக்கியமான வாழ்விற்கான ஏதுநிலையை உருவாக்குதல்.

✸ சிறந்த விழுமியங்களை தம் வளமான வாழ்வின் நிலை பேற்றிற்கு துணையாகக் கொள்ளச் செய்தல்.

# அதிபர் அறிக்கை

எமது பாடசாலையின் பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் வட மாகாண கௌரவ ஆளுநரின் செயலாளர் பெரு மதிப்பிற்குரிய இம் மண்ணின் மைந்தன் திரு.இ. இளங்கோவன் அவர்களே, சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் மதிப்பிற்குரிய தீவக வலயத்தின் வேலணைக் கோட்டக் கல்வி அதிகாரி திருமதி. சாரதாதேவி கிருஷ்ணதாஸ் அவர்களே, கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எமது அன்புக்கும், மதிப்பிற்குமுரிய புங்குடுதீவு தூய சவேரியார் ஆலயப் பங்குத் தந்தை அருட்பணி செ. செபஜீவன் அடிகளார் அவர்களே, கல்வித் திணைக்களத்தின் அதிகாரிகளே, ஏனைய பாடசாலை அதிபர்களே, ஆசிரியர்களே, சமூக சேவை அமைப்புக்களின் பிரதிநிதிகளே, எமது பாடசாலைக்கு பல்வேறு வழிகளிலும் உதவி புரிந்து வரும் நன்கொடையாளர்களே, நலன் விரும்பிகளே, இப் பாடசாலையின் அபிருத்திக் குழு உறுப்பினர்களே, என் அன்பார்ந்த பெற்றோர்களே அன்பான என் சக ஆசிரியர்களே, மாணவச் செல்வங்களே உங்கள் அனைவரையும் இவ் இனிய காலைப் பொழுதினிலே மகிழ்வுடன் வரவேற்கின்றேன்.

இன்றைய பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக வருகை தந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் வட மாகாண கௌரவ ஆளுநரின் செயலாளர் திரு.இ. இளங்கோவன் அவர்களை முதலில் அறிமுகம் செய்து வைப்பது எனது கடமையாகும். இவர் வட புலத்தில் பல அறிஞர்களையும், கல்விமான்களையும் வசதி படைத்தவர் களையும் உருவாக்கிய தீவக மண்ணின் புங்கையூரைப் பிறப்பிடமாகக் கொண்டவர். தனது ஆரம்பக் கல்வியை யா/ புங்குடுதீவு ஸ்ரீகணேசா மகா வித்தியாலயத்தில் கற்று தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தி பெற்று பின்னர் இடைநிலைக்கல்வியையும், உயர் கல்வியையும் யா/இந்துக் கல்லூரியில் பெற்றார். பின்னர் பட்டதாரியாகி இலங்கை நிர்வாக சேவைக்குள் (SLAS) உள்வாங்கப்பட்டு பல்வேறு மாகாண அமைச்சுக்களிலும் செயலாளராகப் பணிபுரிந்தார். இக் காலப் பகுதியில் தமது விஞ்ஞான முதுமாணிக் கற்கையையும் பூர்த்தி செய்தார். தற்போது வடமாகாண கௌரவ ஆளுநரின் செயலாளராகப் பணிபுரிந்து வருவதன் மூலம் புங்குடுதீவு மண்ணிற்கும் மக்களுக்கும் பெருமை தேடித் தந்துள்ளார். இத்தகைய ஒருவரை எமது பாடசாலையில் இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக அழைத்து கௌரவிப்பதில் எமது பாடசாலையும், புங்குடுதீவு மக்கள் சமூகமும் பெருமை கொள்கிறது என்பதனையும் இங்கு குறிப்பிட்டு, மென்மேலும் அவர் பணி எம் மக்களுக்கும், சமூகத்திற்கும் கிடைக்கவும் இறைவனைப் பிரார்த்திப்பதோடு இந் நேரத்தில் எமது பாடசாலைச் சமூகத்தின் சார்பில் அவரை வாழ்த்தி வரவேற்கின்றேன்.

மகிழ்வான இத் தருணத்தில் சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் மதிப்பிற்குரிய தீவக வலயத்தின் வேலணைக் கோட்டக் கல்வி அதிகாரி திருமதி. சாரதா தேவி கிருஷ்ணதாஸ் அவர்களின் வருகை எம் பாடசாலைக்கு பெருமையைத் தருவதாக அமைகிறது. அம்மணி அவர்கள் நெடுந்தீவில் சிறந்த இந்துப் பாரம்பரியத்தைக் கொண்ட குடும்பத்தில் பிறந்தவர். தான் பிறந்த மண்ணிலேயே கற்றல் செயற்பாட்டை மேற்கொண்ட பின், பல்கலைக் கழகத்தில் கலைப்பட்டதாரி (சிறப்பு) பட்டத்தையும், பட்டத்தின்பின் கல்வி டிப்ளோமா பட்டத்தையும் பெற்றுள்ளார். பத்து வருடங்கள் ஆசிரியராகவும், பதினேழு வருடங்கள் அதிபராகவும், மூன்று வருடங்கள் நெடுந்தீவு, வேலணைக் கோட்டங்களில் கோட்டக் கல்விப் பணிப்பாளராகவும் பணிபுரிந்து முப்பது வருடங்கள் கல்விப் பணிக்கு தம்மை அர்ப்பணித்துள்ளார். முப்பது வருடங்கள் கல்விப் பணியாற்றுவதென்பது சாதாரண விடயமொன்றல்ல. அதனால் இன்றைய நன்நாளில் அவரது சேவையைப் பாராட்டிக் கௌரவிப்பதோடு அவர் பணி மேலும் புத்துயிர்ப்புடன் மிளிர இறை ஆசி வேண்டி நிற்கின்றேன்.

பரிசளிப்பு விழாவுடன் இறையேசு, பாலனாய் வந்துதித்த நன்நாளை நினைவு கூர்ந்து ஒளிவிழாவாகவும் கொண்டாடிவரும் இக் காலைப் பொழுதினிலே, இந் நிகழ்விற்கு கௌரவ விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் எம் அன்புக்கும் மதிப்பிற்குமுரிய புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயப் பங்குத்தந்தை அருட்பணி செ. செபஜீவன் அடிகளார் எம் பாடசாலையின் முன்னேற்றத்தின் பிரதான பங்காளி என்றால் மிகையாகாது. இவரைப் பற்றியும் சில கருத்துக்களைக் குறிப்பிட வேண்டியது எனது கடமையாகும்.

அருட்பணி செபமாலை செபஜீவன் அடிகளார் யாழ்ப்பாணம், குருநகரில் கத்தோலிக்க குடும்பத்தில் பிறந்தவர். தனது ஆரம்ப கல்வியை குருநகர் புனித ஜேம்ஸ் மகா வித்தியாலயத்தில் கற்றார். சிறு வயதில் இருந்து ஆலயத்தில் பீடப்பணியாளராக பணியாற்றி இறை அழைப்பை அன்றைய பங்குத் தந்தை அருட்பணி நேசநாயகம் அடிகளார்

ஊடாக உணர்ந்தவராக 1998 ஆம் ஆண்டு யாழ்நகரில் உள்ள புனித மடுத்தீனார் சிறிய குருமடத்தில் குருத்துவ வாழ்வுக்கு தயார்படுத்த குருமடம் புகுந்தார். இதனால் தரம் 9 தொடக்கம் தன்னுடைய பாடசாலை கல்வியை புனித பத்திரிசியார் கல்லூரியில் கற்றார். பின்னர் தனது குருத்துவ கல்வியை கொழும்புத்துறை புனித பிரான்சிஸ் சவேரியார் பெரிய குருமடத்தில் தொடந்தார்.

குருத்துவ கல்வியிலே மெய்யியல் இறையியல் ஆகிய பட்டப்படிப்பை பூர்த்தி செய்து 2015 ஆம் ஆண்டு குருவாக யாழ் மறைமாவட்ட ஆயர் மேதகு தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையினால் யாழ். மரியன்னை பேராலயத்தில் திருநிலைப்படுத்தப்பட்டார். தனது குருத்துவ பணியில் பாஷையூர் புனித அந்தோனியார் பங்கிலும், கூழாமுறிப்பு. புனித சூசையப்பர் பங்கிலும் பணியாற்றி 2017 ஆம் ஆண்டு பங்குத் தந்தையாக புங்குடுதீவு புனித பிரான்சிஸ் சவேரியார் பங்கில் பொறுப்பேற்று இன்றுவரை ஆன்மீக பணியாற்றி வருகின்றார். சிறப்பான அவரது பணியைப் பாராட்டி வாழ்த்துவதோடு, அவர் சிறந்த உடல் உள ஆரோக்கியத்துடன் மென்மேலும் பணியாற்ற இறைவனை வேண்டி நிற்கின்றேன்.

1833 ஆம் ஆண்டளவில் கத்தோலிக்க மிசனறி சபையினரால் ஆரம்பிக்கப்பட்ட இப் பாடசாலையானது இம்மண்ணில் 184 வருடங்களைக் கடந்து கால ஓட்டத்திற்கேற்ப பல்வேறு வளர்ச்சிப் படிகளைத் தாண்டி கல்விப் பணியாற்றி வருகின்றது.

சிறந்த பாடசாலைக் கலாசாரத்தையும், தரமான நிர்வாகக் கட்டமைப்பையும் கொண்ட தலைமைத்துவத்தினை கொண்டதாக விளங்கும் இப் பாடசாலை; நல்லொழுக்கத்தையும் ஆன்மீகத்தோடு கூடிய விழுமியக் கற்றல் செயற்பாடுகளையும் உள்ளடக்கிய, மாணவர்களை மையப்படுத்திய ஒரு மகிழ்வான கற்றல் சூழலையும் கற்பித்தல் நடவடிக்கைகளையும் முன்னெடுத்து "தரமான கல்வி, தரமான செயற்பாடு, தரமான பாடசாலை" என்ற இலக்கிற்கமைய செயற்பட்டு வருகிறது.

## பாடசாலை மாணவர் விபரம்

| தரம் | ஆண்கள் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1 | 07 | 07 | 14 |
| 2 | 06 | 04 | 10 |
| 3 | 07 | 09 | 16 |
| 4 | 07 | 11 | 18 |
| 5 | 12 | 08 | 20 |
| | 39 | 39 | 78 |

## பாடசாலை அதிபர் ஆசிரியர்கள் விபரம்

| இல | பெயர் | பெண்கள் | மொத்தம் |
|---|---|---|---|
| 1. | திரு. அ. ஜேம்ஸ்மேஷன் | B.A., Dip. in. fish, PGDE, MED. | SLPS-III |
| 2. | செல்வி ப. சித்திராதேவி | B.E.D | SLTS 2-I |
| 3. | திருமதி. கி. உதயகுமார் | A/L | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர் |
| 4. | திருமதி. ஸோ. சசிதரன் | A/L | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர் |
| 5. | திருமதி. யா. ஞானகுமார் | A/L | பயிற்றப்பட்ட ஆரம்பக்கல்வி ஆசிரியர் |
| 6. | செல்வி ச. சஷீரா | A/L, Dip in teaching | SLTS 3-I |
| 7. | செல்வி வி. புஸ்படொமின்றில்டா | A/L | தொண்டராசிரியர் |
| 8. | செல்வி கே. மாதுரி | A/L | தொண்டராசிரியர் |

எமது பாடசாலை மாணவர்களது கல்வி வளர்ச்சியின் பிரதான பங்காளிகள் ஆசிரியர்களே. இப்பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியர்கள் அனைவரும் தூர பிரதேசங்களில் இருந்து வந்து பணியாற்றுபவர்களாவர். இவர்களது அளப்பரிய பணியைப் பாராட்டி இவ் ஆசிரியர்களையும் இந் நாளில் வாழ்த்தி நிற்கின்றேன்.

## மாணவர் அடைவு

2017ஆம் ஆண்டின் தரம் 5 புலமைப்பரிசின் அடிப்படையில் நோக்கும்போது மாணவர் அடைவு சிறிதளவு வீழ்ச்சியைக் கொண்டிருந்தாலும் எதிர் காலத்தில் மாணவர் அடைவுப் பெறுபேற்றினை அதிகரிப்பதற்காக பல்வேறு செயல் திட்டங்களையும் முன்னெடுத்து வருகின்றோம். மும் மொழிப் பயிற்சிகள், மேலதிக வகுப்புகள், செயலட்டைகள் ஊடான கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் என்பன எம்மால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதுமட்டுமன்றி, மாணவர் அடைவிற்கான ஊக்கற் செயற்பாடாகவே இவ் பரிசளிப்பு விழாவினையும் நடாத்தி வருகின்றோம். தரம் 1 முதல் தரம் 5 வரை தவணைப் புள்ளிகளின் அடிப்படையிலும், தரம் 5 புலமைப் பரிசில் பெறுபேறுகளுக்கும், இணைப்பாட விதான செயற்பாடுகளுக்கும் பரிசுகள் இவ் ஆண்டில் வழங்கப்பட்டு மாணவர்களுக்கு ஊக்கமூட்டப்படுகின்றது.

## இணைப்பாட விதான செயற்பாடுகள்

செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுக்கள் மாணவருக்கு காலை பாடங்கள் ஆரம்பிப்பதற்கு முன் முன்னெடுக்கப்படுகின்றன. இவ் ஆண்டு நடைபெற்ற கோட்ட மட்ட செயற்பட்டு மகிழ்வோம் விளையாட்டுப் போட்டிகளில் தரம் 5 மாணவர்கள் இரண்டாம் இடத்தையும், தரம் 4 மாணவர்கள் மூன்றாம் இடத்தையும் பெற்றுக் கொண்டதுடன் தரம் 5 மாணவர்கள் வலய மட்டப் போட்டிகளில் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது.

இணைப் பாடவிதான செயற்பாடுகள் மாணவரின் நடத்தைப் பண்பு உருவாக்கலிலும், திறன் விருத்தியிலும் மற்றும் ஆளுமை வளர்ச்சியிலும் பெரும் பங்கு வகிக்கின்றன. இருபத்தியோராம் நூற்றாண்டில் வாழ இருக்கும் இன்றைய ஆரம்பக்கல்வி மாணவர்களிற்கு அவசியமான விழுமியப் பண்புகள், தொடர்பாடல் திறன்கள், கணிதத் திறன், ஆக்கத்திறன், மற்றும் அடிப்படைத் திறன்களை வளர்க்கும் செயற்திட்டமாகவே Gifted and Talented Hub Competition எனப்படும் இணைப்பாட விதான செயற்பாடு எமது பாடசாலையில் முன்னெடுக்கப்பட்டு வருகிறது. அனைத்து மாணவர்களையும் பங்கு பற்றச் செய்து பூரண ஆளுமை விருத்தியை எட்டுவதை இது நோக்கமாகக் கொண்டுள்ளது.

சமய சார் செயற்பாடுகளாக கத்தோலிக்க, இந்து சமயத்திற்கான விழாக்களான ஒளிவிழா, வாணிவிழா என்பன உரிய காலங்களில் நடாத்தப்படுவதுடன், மறைக்கல்விப் பரீட்சையிலும் எமது மாணவர்கள் தோற்றி சான்றிதழ்களையும் பெற்றுள்ளனர்.

## வருடாந்த முக்கிய நிகழ்வுகள்

11.01.2017

எமது பாடசாலையில் கால்கோள் விழா நடைபெற்றது. பிரதம விருந்தினராக புங்குடுதீவு புனித சவேரியார் பிரான்ஸ் ஒன்றிய-இணைப்பாளர் திருமதி. ம. அன்ரனிக்கம்மா அவர்கள் கலந்து சிறப்பித்தார்.

26.01.2017

பாடசாலையில் சுவிஸ் ஒன்றியத்தினால் அமைக்கப்பட்ட உணவு பரிமாறும் அறை திறப்புவிழா இடம் பெற்றது. இதில் தீவக கல்வி வலய முன்பள்ளி உதவிக் கல்விப்பணிப்பாளர் திருமதி ஆனந்தி குமாரதாசன் அவர்களும், சுவிஸ் ஒன்றிய பொறுப்பாளர் திருமதி சுலோசனா அவர்களும் கலந்து சிறப்பித்தனர்.

16.03.2017

பாடசாலையின் புதிய அதிபராக திரு.அ.ஜேம்ஸ் மேஷன் அவர்கள் கடமையைப் பொறுப்பேற்றார். அத்துடன் இதே நாளில், பாடசாலையில் வருடாந்த இல்ல மெய்வல்லுநர் போட்டி நடைபெற்றது. இதில் தீவகக் கல்வி வலய உதவிக் கல்விப் பணிப்பாளர் திரு. வீ. கணேசராஜா (கல்வி அபிவிருத்தி) அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பித்தார்.

23.03.2017

எழுத வாசிக்கத் தெரியாத மாணவர்களுக்கு ''அடிப்படைத் திறன் பயிற்சித் திட்டம்'' ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது மூன்று மாத கால பயிற்சியைக் கொண்டது.

03.05.2017

தரம் 3, தரம்4 வகுப்புகளில் கற்கும் மாணவர்களின் ஆங்கில அடிப்படை அறிவை விருத்தி செய்யும் நோக்கில் "Basic English Skills Programme" என்ற நிகழ்ச்சித் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இது மாலை நேரத்தில் நடைபெற்றது. மூன்று மாத காலப் பயிற்சியைக் கொண்டது.

29.05.2017

பாடசாலை மாணவர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதற்கான நிதி அனுசரணை சுவிட்சர்லாந்தில் வசித்து வரும் திரு. யாக்கோபு யேசுதாசனால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

29.05.2017

மாணவத் தலைவர்கள், வகுப்புத் தலைவர்களுக்கு சின்னம் சூட்டும் நிகழ்வு நடைபெற்றது. இந் நிகழ்விற்கு புங்குடுதீவு புனித சவேரியார் ஆலய பங்குத் தந்தை அருட்பணி. செ. செபஜீவன் அவர்கள் பிரதம விருந்தினராக கலந்து சிறப்பித்தார்.

21.06.2017

எமது பாடசாலையில் இலங்கைப் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் சங்க யாழ் மாவட்ட கிளையின் அனுசரனையுடன் வேலணை சுகாதார வைத்திய அதிகாரியினால் 'வாய்ச் சுகாதாரத்தை மேம்படுத்தல்' எனும் செயற்திட்டம் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இதன் போது மாணவர்களுக்கு பற்தூரிகை மற்றும் பற்பசை என்பனவும் வழங்கப்பட்டன.

02.10.2017

எமது பாடசாலையில் உலக சிறுவர் தினம் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இந் நிகழ்விற்கு பிரதம விருந்தினராக புங்குடுதீவு புனித சவேரியார் ஆலய பங்குத் தந்தை அருட்பணி. செ. செபஜீவன் அவர்கள் கலந்து சிறப்பித்தார். இதில் மாணவர்கள் அனைவருக்கும் புதிய புத்தகப் பை வழங்கி வைக்கப்பட்டது. இதற்கான அனுசரணையை கனடாவில் வசிக்கும் திரு. நவம் என்பவர் மேற்கொண்டிருந்தார்.

09.10.2017

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியர் தின விழா நடைபெற்றது. இந் நிகழ்விற்கு புங்குடுதீவு புனித சவேரியார் ஆலய பங்குத்தந்தை அருட்பணி. செ.செபஜீவன் அவர்கள் கலந்து கொண்டு ஆசிரியர்களை வாழ்த்திக் கௌரவித்தார்.

08.11.2017

எமது பாடசாலையில் சிறுவர்சந்தை நிகழ்வு இடம்பெற்றது. இந்நிகழ்வுக்கு சேவைக்கால ஆசிரிய ஆலோசகர்களான திரு.கு.செல்வகுமார் அவர்களும், திரு.பி.இரெட்ணராஜா அவர்களும் விருந்தினர்களாகக் கலந்து சிறப்பித்ததுடன், வைத்திய அதிகாரி கலாநிதி முகுந்தன் அவர்களால் இலவச வைத்திய பரிசோதனை முகாமும் நடாத்தப்பட்டது.

21.11.2017

புங்குடுதீவு புனித சவேரியார் பிரான்ஸ் ஒன்றியத்தினரால் பாடசாலைக்கு ஒலி அமைப்பு அன்பளிப்பு செய்யும் நிகழ்வு நடைபெற்றது.

## எதிர்கால முன்னேற்றத்திற்கு

அன்பான பெற்றோரே,சமூகப் பிரதிநிதிகளே, ஆசிரியர்களே எமது பாடசாலையானது கிராமப்புறப் பாடசாலையாகும். இன்றைய நிலையில் எமது பாடசாலையானது கற்றல் செயற்பாடுகள், பௌதீக வளங்கள், ஆசிரிய வளம், மனப்பாங்கு என்பவற்றில் முன்னேற்றம் காண வேண்டியது காலத்தின் கட்டாயமாகும். அறிவு மற்றும் தொழில்நுட்பம் சார் யுகத்தில் வாழ்ந்து கொண்டிருக்கும் நாம் அறிவார்ந்த சமூகமாக எம்மை மாற்றுவதற்கு பல வழிகளிலும் பிராயச் சித்தம் செய்ய வேண்டியவர்களாக இருக்கிறோம். கற்கும் சமூகமொன்றை

உருவாக்குவதற்கு எம் மனப்பாங்கில் மாற்றம் காண வேண்டும். அதனூடே அறிவுச் சமூகமாக மாறி சமூக அசைவின் முன்னேற்றத்திற்கு காத்திரமான பங்காளிகளாக மாற இத் தருணத்தில் அனைவருக்கும் அழைப்பு விடுத்து நிற்கின்றேன்.

மேலும், மாணவரின் முன்னேற்றத்திற்கு உறுதியான தொடர்ச்சியான பெற்றோர்-ஆசிரியர் தொடர்பு அவசியமாகும். இப் பிணைப்பு வலுப்படுத்தப்படும்போது மாணவர் கல்வி மேம்படும் என்பதில் ஐயமில்லை. ஆரம்பக் கல்வியைப் பொறுத்தவரை பாடசாலையின் நாளாந்த கற்றல் செயற்பாடுகளை பூரணப்படுத்தவும், பிள்ளைப் பருவத்தை முழுமையாக மாணவர் அனுபவிக்கவும் வீட்டில் உகந்த சூழலை உருவாக்குவது பெற்றோரின் கடமையாகும்.

அத்துடன், பாடசாலையால் தொடர்ந்து முன்னெடுக்கப்படும் விசேட வகுப்புக்கள், இணைப்பாட விதான செயற்பாடுகளுக்கு முன்னுரிமை கொடுக்கும் மனப்பான்மையை எமது சமூகப் பெற்றோர் ஏற்படுத்துவது இன்றைய ஆரம்பக் கல்வி மாணவரின் கட்டாய தேவை என்பதைக் குறிப்பிட்டு இதற்கு ஒத்துழைக்க பெற்றோருக்கு அழைப்பு விடுத்து நிற்கின்றேன்.

## நன்கொடையாளர்களுக்கு நன்றிகள்

இவ் வருடம் எமது பாடசாலைக்கு பல நன்கொடையாளர்கள் பல்வேறு வழிகளிலும் நிதி மற்றும் பொருள் உதவியளித்துள்ளார்கள். அவர்களையும் இந்நேரத்தில் நினைவுகூர்கின்றேன். அவர்களுக்கு பாடசாலைச் சமூகத்தின் சார்பில் நன்றிகளையும், பாராட்டுக்களையும் தெரிவிப்பதோடு அவர்களும், அவர்தம் குடும்பத்தினரும் சீரும் சிறப்பும் பெற்று வாழ இந் நன்நாளில் குழந்தை இயேசுவைப் பிரார்த்திக்கின்றேன்.

## நன்றியும், நிறைவும்

இன்றைய பரிசளிப்பு விழாவும், ஒளி விழாவும் சிறப்பாக அமைய அனைத்து வழிகளிலும் உதவிய இறைவனுக்கு நன்றியைக் கூறிக்கொண்டு, பல்வேறு வேலைப்பளுக்களின் மத்தியிலும் எம் சமூகத்தின் மீது தாம் கொண்ட அக்கறை மற்றும் பற்று காரணமாக எமது அழைப்பை ஏற்று இங்கு வருகை தந்து விழாவைச் சிறப்பித்துக் கொண்டிருக்கும் வடமாகாண கௌரவ ஆளுநரின் செயலாளர் திரு.இ. இளங்கோவன் அவர்களுக்கு எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அடுத்து, இந்நிகழ்விற்கு சிறப்பு விருந்தினராகக் கலந்து சிறப்பித்துக் கொண்டிருக்கும் தீவக வலய வேலணைக் கோட்டக் கல்வி அதிகாரி திருமதி. சாரதா தேவி கிருஷ்ணதாஸ் அவர்களுக்கும் எமது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். அடுத்து, இவ் இனிய தருணத்தில் எம் அனைவருக்கும் ஆசி கூறி நிகழ்வை சிறப்பித்துக் கொண்டிருக்கும் அன்பிற்கும் மதிப்பிற்குமுரிய அருட்தந்தை செபமாலை செபஜீவன் அவர்களுக்கும் என் மனமார்ந்த நன்றிகள் உரித்தாகட்டும். கல்வித் திணைக்கள அதிகாரிகளுக்கும், ஏனைய பாடசாலை அதிபர், ஆசிரியர்களுக்கும், சமூக சேவை அமைப்பின் பிரதிநிதிகளுக்கும், நலன்விரும்பிகளுக்கும், பாடசாலை அபிவிருத்திக் குழு உறுப்பினர்களுக்கும், பழைய மாணவர்களுக்கும், பெற்றோர்களுக்கும், என் சக ஆசிரியர்களுக்கும், மாணவச் செல்வங்களுக்கும் மற்றும், இவ் அறிக்கையை அச்சிட்டுப் பிரசுரிக்கவும், மற்றும் பல அச்சிடல் வேலைகளைச் செய்தும் உதவிய J.S உரிமையாளர் யூட்சன் அவர்களுக்கும் நன்றியைக் கூறிக் கொள்வதோடு இப்பரிசளிப்பு விழாவினை வெகு சிறப்பாக நடாத்த நிதியுதவியளித்த சுவிஸ் நாட்டில் வசித்து வரும் யாக்கோப்பு யேசுதாசன், மற்றும் எம் பாடசாலைப் பெற்றோர் அனைவருக்கும் விசேட நன்றிகளைத் தெரிவித்துக் கொண்டு எனது அதிபர் அறிக்கையை நிறைவு செய்கின்றேன்.

நன்றி

திரு. அ. ஜேம்ஸ் மேஷன்
08.12.2017

**தரம் 01**

| இல | மாணவர் பெயர் | விடையம் | நிலை |
|---|---|---|---|
| 1. | றெக்ஷாளினி கில்பேட் பொணிபஸ் | வாசிப்பு, ஆங்கில வாசிப்பு, சொல்வதெழுதல்,<br>கட்டுரை, கவிதை, சமயப் பொது அறிவு<br>விரைவு கணிதம்,ஆங்கில எழுத்து, பொது அறிவு,<br>பேச்சு<br>ஆக்கம், ஓவியம், பாடநூல் பராமரிப்பு | <br>1<br><br>2<br>3 |
| 2. | கிங்ஷாஜினி டீபன் | ஓவியம், சிறுகதை, பேச்சு<br>ஆக்கம், பாட்டு, தனி நடிப்பு,<br>சொல்வதெழுதல், கட்டுரை<br>வாசிப்பு, உறுப்பெழுத்து, ஒழுக்கம்,<br>சமய பொது அறிவு | 1<br><br>2<br><br>3 |
| 3. | சாணுஜா மரிய செல்வம் | ஆக்கம், சுத்தம், ஒழுக்கம்<br>பாடநூல் பராமரிப்பு<br>ஆங்கில வாசிப்பு, பேச்சு, கவிதை | 1<br>2<br>3 |
| 4. | சிந்துஜா சுதர்சன் | உறுப்பெழுத்து | 2 |
| 5. | யசோதனி வாசுதேவன் | பாட்டு, சைவசமய பொது அறிவு | 1 |
| 6. | கஜேந்தினி ஜீவரூபன் | சுத்தம், ஒழுக்கம், செயற்பட்டு மகிழ்தல்<br>சொல்வதெழுதல் | 2<br>3 |
| 7. | ரசி குமார் திஸ்மிஜன் | விரைவு கணிதம், ஆங்கில எழுத்து, தனி நடிப்பு,<br>பொது அறிவு<br>வாசிப்பு, ஆங்கில வாசிப்பு<br>செயற்பட்டு மகிழ்வோம் | <br>1<br>2<br>3 |
| 8. | சகாயராஜ் சஞ்சய் | பாடநூல் பராமரிப்பு<br>கவிதை, சமயப் பொது அறிவு<br>பொது அறிவு | 1<br>2<br>3 |
| 9. | சரன்சியா சாருஜன் | உறுப்பெழுத்து, செயற்பட்டு மகிழ்வோம்<br>ஓவியம், சிறுகதை<br>ஆங்கில எழுத்து, தனி நடிப்பு, கட்டுரை | 1<br>2<br>3 |
| 10. | சுவாமிதாசன் மனாசே | சுத்தம் | 3 |



ஆசிரியர் குழாம்

## தரம் 02

| இல | மாணவர் பெயர் | விடையம் | நிலை |
|---|---|---|---|
| 1. | கில்பேட் பொணிபஸ் றெஜின் பெனோஸ் | வாசிப்பு, ஓவியம், சொல்வதைழுதல், கவிதை<br>ஆங்கில எழுத்து, பாட்டு, ஆங்கில வாசிப்பு<br>ஒழுக்கம், கட்டுரை, சமய பொது அறிவு | 1<br>2<br>3 |
| 2. | அகிலேஸ்வரன் கபில்ரன் | உறுப்பெழுத்து, ஆக்கம், சுத்தம், பேச்சு,<br>சமயப் பொது அறிவு<br>விரைவு கணிதம்<br>பொது அறிவு | <br>1<br>2<br>3 |
| 3. | நகுலேஸ்வரன் மலரவன் | ஆக்கம், சைவ சமய பொது அறிவு | 2 |
| 4. | அலெக்ஸ்சாண்டர் பிரவின் | ஓவியம், செயற்பட்டு மகிழ்வோம்<br>நடிப்பு | 1<br>3 |
| 5. | நாகேந்திர வேல் ஷாம் | விரைவு கணிதம், நடிப்பு<br>ஒழுக்கம், செயற்பட்டு மகிழ்வோம், கட்டுரை<br>ஆக்கம், சிறுகதை, பேச்சு, கவிதை,<br>பாடநூல் பராமரிப்பு | 1<br>2<br><br>3 |
| 6. | சுபதீபன் சுபஹாஸ் | ஒழுக்கம்<br>சமயப் பொது அறிவு<br>ஓவியம் | 1<br>2<br>3 |
| 7. | அஜனி ஜயந்தன் | கவிதை, பொது அறிவு<br>வாசிப்பு, பேச்சு<br>உறுப்பெழுத்து, சொல்வதெழுதல் | 1<br>2<br>3 |
| 8. | நிருஜா ருக்மன் நெனஸ் | கட்டுரை<br>உறுப்பெழுத்து, சொல்வதெழுதல், கவிதை<br>வாசிப்பு, விரைவு கணிதம், பாட்டு, ஆங்கில எழுத்து,<br>ஆங்கில வாசிப்பு, செயற்பட்டு மகிழ்வோம் | 1<br>2<br><br>3 |
| 9. | அனுஸ்கா வாசுதேவன் | சைவசமய பொது அறிவு<br>சிறுகதை, நடிப்பு, பொது அறிவு,<br>பாடநூல் பராமரிப்பு | 1<br><br>2 |
| 10. | மேஷா சுவாமிதாசன் | பாட்டு, ஆங்கில எழுத்து, ஆங்கில வாசிப்பு,<br>பாடநூல் பராமரிப்பு<br>சுத்தம் | <br>1<br>2 |

## தரம் 03

| இல | மாணவர் பெயர் | விடையம் | நிலை |
|---|---|---|---|
| 1. | விஜயதாஸ் டேமியன் | ஆக்கம், ஓவியம், சமயப் பொது அறிவு<br>வாசிப்பு, ஆங்கில வாசிப்பு,<br>சொல்வதெழுதல், பேச்சு<br>ஆங்கில எழுத்து, பொது அறிவு, கவிதை | 1<br><br>2<br>3 |
| 2. | நாகேந்திரவேல் கரிஸ் | செயற்பட்டு மகிழ்வோம், பேச்சு, கவிதை<br>ஆக்கம், ஓவியம், விரைவு கணிதம்<br>வாசிப்பு, ஆங்கில வாசிப்பு, சமய பொது அறிவு | 1<br>2<br>3 |
| 3. | ஜெயராசரகன் திகாஷ் | உறுப்பெழுத்து, ஒழுக்கம்<br>செயற்பட்டு மகிழ்வோம், கட்டுரை,<br>சமய பொது அறிவு<br>பாடநூல் பராமரிப்பு, சுத்தம் | 1<br><br>2<br>3 |
| 4. | றமேஸ் பெர்னான்டோ விபிசன் | பாடநூல் பராமரிப்பு<br>ஒழுக்கம் | 2<br>3 |
| 5. | ஜெயராச கடோட்சன் ரிஷிகாந் | செயற்பட்டு மகிழ்வோம் | 3 |
| 6. | அன்ரன் அன்ரனி டெனிஸ்ரன் | நடிப்பு | 2 |
| 7. | கேஷனா திருலங்கன் | வாசிப்பு, ஆங்கில வாசிப்பு, நடிப்பு, பொது அறிவு,<br>சைவசமய பொது அறிவு<br>உறுப்பெழுத்து, பாட்டு, கவிதை<br>விரைவு கணிதம், சொல்வதெழுதல்,<br>கட்டுரை, பேச்சு | <br>1<br>2<br><br>3 |
| 8. | டன்சினி பத்மறாஜன் | பாட்டு, விரைவு கணிதம், சுத்தம், ஆங்கில எழுத்து,<br>சொல்வதெழுதல், கட்டுரை<br>சிறுகதை, பொது அறிவு<br>சமய பொது அறிவு, உறுப்பெழுத்து, ஆக்கம் | <br>1<br>2<br>3 |
| 9. | கார்த்திகா திபாகரன் | சிறுகதை<br>பாட்டு | 1<br>3 |
| 10. | டினோசியா சசிகரன் | ஆங்கில எழுத்து<br>சமய பொது அறிவு | 2<br>3 |
| 11. | பதுஷாகினி சசிதரன் | பாடநூல் பராமரிப்பு<br>சுத்தம், ஒழுக்கம்<br>ஓவியம் | 1<br>2<br>3 |
| 12. | மேரி அபிஷா ஜீவராசா | நடிப்பு | 3 |
| 13. | யனுசியா றோகான் ஸ்ரனின் | கதை | 3 |

## தரம் 04

| இல | மாணவர் பெயர் | விடையம் | நிலை |
|---|---|---|---|
| 1. | வசிதரன் மேதையன் | ஆங்கில வாசிப்பு, கட்டுரை, பேச்சு, பாட்டு, ஓவியம்<br>விரைவு கணிதம், சொல்வதெழுதல்,<br>கவிதை, சமயப் பொது அறிவு<br>வாசிப்பு, பொது அறிவு | 1<br><br>2<br>3 |
| 2. | அன்ரனி டிபோல் யூட்ஸ்கமிலஸ் | கிறிஸ்தவ சமய பொது அறிவு, ஆங்கில எழுத்து<br>உறுப்பெழுத்து,பேச்சு | 1<br>3 |
| 3. | டாறியஸ் டனுஜன்ராஜ் | கதை, கவிதை<br>ஆக்கம்<br>சமய பொது அறிவு | 1<br>2<br>3 |
| 4. | ரசிகுமார் கில்பேட் | பாட்டு<br>ஆக்கம் | 2<br>3 |
| 5. | கந்தசீலன் அஸ்வின் | ஒழுக்கம்<br>விரைவு கணிதம் | 2<br>3 |
| 6. | யஸ்மிகா லிங்கப்பிரதாப் | ஆக்கம், சுத்தம், நடிப்பு<br>வாசிப்பு, ஓவியம், கதை, சமய பொது அறிவு | 1<br>2 |
| 7. | அஸ்வினி அமுதின குமார் | உறுப்பெழுத்து, பொது அறிவு<br>சொல்வதெழுதல், ஆங்கில எழுத்து, கட்டுரை,<br>சமய பொது அறிவு | 1<br><br>3 |
| 8. | சாருகா குணபாலசிங்கம் | விரைவு கணிதம், சொல்வதெழுதல்,<br>சமய பொது அறிவு<br>கட்டுரை, உறுப்பெழுத்து, ஆங்கில எழுத்து,<br>ஆங்கில வாசிப்பு, பொது அறிவு, பேச்சு<br>பாட்டு, சுத்தம், கதை, நடிப்பு, கவிதை | <br>1<br><br>2<br>3 |
| 9. | டன்சியா இராசேந்திரன் | ஓவியம் | 3 |
| 10. | மயூரி றொனால்ட் றீகன் | வாசிப்பு<br>சுத்தம், நடிப்பு | 1<br>2 |
| 11. | மிக்றறின் மேரி ரமேஸ் பெர்னான்டோ | ஒழுக்கம் | 1 |
| 12. | கயல்விழி அபிதரன் | ஒழுக்கம் | 3 |

## தரம் 05

| இல | மாணவர் பெயர் | விடயம் | நிலை |
|---|---|---|---|
| 1. | சலோசியஸ் அருள்சீலன் கலிஸ்ரன் | வாசிப்பு, சொல்வதெழுதல், பேச்சு, சுத்தம்,<br>விரைவு கணிதம், ஒழுக்கம், கவிதை,<br>பொது அறிவு, கட்டுரை, கத்தோலிக்கம்,<br>நடிப்பு, சிறுகதை, ஆங்கில வாசிப்பு, ஓவியம்<br>அழகியல், பாடநூல் பாதுகாப்பு | <br><br><br>1<br>2 |
| 2. | வேணுஜன் ஜெரோஸ் | ஆங்கில எழுத்து, உறுப்பெழுத்து<br>கட்டுரை<br>பொது அறிவு | 1<br>2<br>3 |
| 3. | நடராசா குபேரன் | செயற்பட்டு மகிழ்வோம், ஆக்கம், சமயம்<br>சுத்தம் | 1<br>3 |
| 4. | இரகுநாதன் தனுசன் | ஆக்கம், சமயம், நடிப்பு<br>ஒழுக்கம் | 2<br>3 |
| 5. | தவராஜா பிரகாஷ்ராஜ் | நடிப்பு | 3 |
| 6. | குணேஸ்வரன் லிபேசன் | ஓவியம் | 2 |
| 7. | மரியதாஸ் மேர்வின்சில்வா | செயற்பட்டு மகிழ்வோம் | 3 |
| 8. | மரிய லோஜினி பீலிஸ் | அழகியல்<br>சொல்வதெழுதல், பேச்சு, சிறுகதை,<br>ஆங்கில வாசிப்பு<br>கட்டுரை, கத்தோலிக்கம்,<br>விரைவு கணிதம், கவிதை | 1<br><br>2<br><br>3 |
| 9. | மேரி அமலினா அன்ரனி பிரான்சிஸ் | உறுப்பெழுத்து, பாடநூல் பாதுகாப்பு,<br>விரைவு கணிதம், கவிதை, பொது அறிவு,<br>கத்தோலிக்க சமயம்<br>ஆங்கில எழுத்து, ஆங்கில வாசிப்பு, சிறுகதை | <br><br>2<br>3 |
| 10. | மேரி ஜெனோஜினி குமார் பொனிபஸ் | சுத்தம்<br>உறுப்பெழுத்து, அழகியல், ஓவியம் | 2<br>3 |
| 11. | லிர்சாயினி யதுசனா ஆனந்த குமார் | பாடநூல் பாதுகாப்பு | 1 |
| 12. | டர்சிகா ரஜிபன் | ஒழுக்கம் | 2 |

## தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையில் 70 புள்ளிகளுக்கு மேல் பெற்ற மாணவர்கள் - 2017



Mas. Salosiyas
Arulseelan Kalistan
153



Miss. Meri Amalina
Antany Pirancis
122



Miss. Mariyalogini
Peeris
102



Mas. Nadarasa Kuperan
98



Mas. Venu Jeros
96



Miss. Meri Jenojini Kumar
Ponipas
90



Miss. Darshika Rajeevan
75



Mas. Mariyathas
Mervinsilva
74



**செயற்பட்டு மகிழ்வோம்**

கோட்ட மட்டத்தில் 2ஆம் இடம் பெற்ற அணி



தரம் 2 மாணவர்கள்

தரம் 3 மாணவர்கள்





தரம் 4 மாணவர்கள்

தரம் 5 மாணவர்கள்



## Gifted & Talented Hub Competition அடிப்படையில் வகுப்பறை நட்சத்திரங்களாகத் தெரிவு செய்யப்பட்டு பரிசில் பெறுவோர்

| | | |
|---|---|---|
| தரம் - 01 | - | றெக்ஷாளினி கில்பேட் பொனிபஸ் |
| தரம் - 02 | - | கில்பேட் பொனிபஸ் றெஜின் பெனோஸ் |
| தரம் - 03 | - | டன்சினி பத்மறாஜன் |
| தரம் - 04 | - | வசிதரன் மேதையன் |
| தரம் - 05 | - | சலோசியஸ் அருள்சீலன் கலிஸ்ரன் |

## Gifted & Talented Hub Competition அடிப்படையில் "Best Performer" பரிசில் பெறுபவர்

| | | |
|---|---|---|
| தரம் - 05 | - | சலோசியஸ் அருள்சீலன் கலிஸ்ரன் |

## தவணைப்புள்ளிகளின் அடிப்படையில் பரிசில் பெறுவோர்

### தரம் 1

| இல | மாணவர் பெயர் | விடையம் | நிலை |
|---|---|---|---|
| 1. | ரசிகுமார் திஸ்மிஜன் | தமிழ், கணிதம், சுற்றாடல், கத்தோலிக்கம் | அதிவிசேடம் |
| 2. | சகாயராஜ் சஞ்சய் | தமிழ், கணிதம், சுற்றாடல், கத்தோலிக்கம் | அதிவிசேடம் |
| 3. | சரண்சியா சாருஜன் | தமிழ், கணிதம், சுற்றாடல், கத்தோலிக்கம் | அதிவிசேடம் |
| 4. | தேவநேசன் எபநேசன் | தமிழ், கணிதம், சுற்றாடல், கத்தோலிக்கம் | விசேடம் |
| 5. | ஆனந்த குமார் கெமன்சன் | தமிழ், கணிதம், சுற்றாடல், கத்தோலிக்கம் | விசேடம் |
| 6. | லிங்கப்பிரதாப் சரோன் | தமிழ், கணிதம், சுற்றாடல்<br>கத்தோலிக்கம் | அதிவிசேடம்<br>விசேடம் |
| 7. | சுவாமிதாசன் மனாசே | தமிழ், கணிதம், சுற்றாடல், கத்தோலிக்கம் | சாதாரணம் |
| 8. | றெக்சாளினி கில்பேட் பொணிபஸ் | தமிழ், கணிதம், சுற்றாடல், கத்தோலிக்கம் | அதிவிசேடம் |
| 9. | கிங்ஷாஜினி டீபன் | தமிழ், கணிதம், சுற்றாடல், கத்தோலிக்கம் | அதிவிசேடம் |

| | | | |
|---|---|---|---|
| 10. | சாணுஜா மரிய செல்வம் | தமிழ், கணிதம், சுற்றாடல்<br>கத்தோலிக்கம் | அதிவிசேடம்<br>விசேடம் |
| 11. | சிந்துஜா சுதர்சன் | தமிழ், கணிதம், சுற்றாடல்<br>கத்தோலிக்கம் | அதிவிசேடம்<br>விசேடம் |
| 12. | யசோதனி வாசுதேவன் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் | சாதாரணம் |
| 13. | கஜேந்தினி ஜீவரூபன் | தமிழ், கணிதம், சுற்றாடல்<br>கத்தோலிக்கம் | அதிவிசேடம்<br>விசேடம் |
| 14. | வினோஜினி விக்னேஸ்வரன் | தமிழ், கணிதம், சுற்றாடல், கத்தோலிக்கம் | அதிவிசேடம் |

## தரம் 2

| இல | மாணவர் பெயர் | விடையம் | நிலை |
|---|---|---|---|
| 1. | கில்பேட் பொனிபஸ்<br>ரெஜின் பெனோஸ் | தமிழ், சுற்றாடல், கத்தோலிக்கம்<br>கணிதம் | அதிவிசேடம்<br>விசேடம் |
| 2. | அகிலேஸ்வரன் கபில்ரன் | தமிழ், கணிதம், சுற்றாடல், கத்தோலிக்கம் | அதிவிசேடம் |
| 3. | நாகேந்திரவேல் ஷாம் | தமிழ், கணிதம், சுற்றாடல்<br>கத்தோலிக்கம் | அதிவிசேடம்<br>விசேடம் |
| 4. | நகுலேஸ்வரன் மலரவன் | கணிதம், சுற்றாடல், சமயம்<br>தமிழ் | விசேடம்<br>சாதாரணம் |
| 5. | சுபதீபன் சுபஹாஸ் | கணிதம், சுற்றாடல், தமிழ்<br>கத்தோலிக்கம் | அதிவிசேடம்<br>சாதாரணம் |
| 6. | அலெக்சாண்டர் பிரவின் | கணிதம், சுற்றாடல், கத்தோலிக்கம்<br>தமிழ் | விசேடம்<br>சாதாரணம் |
| 7. | அஜனி ஜயந்தன் | கணிதம், சுற்றாடல்<br>தமிழ்<br>கத்தோலிக்கம் | அதிவிசேடம்<br>விசேடம்<br>சாதாரணம் |
| 8. | நிருஜா ருக்மன்நெனஸ் | தமிழ், கணிதம், சுற்றாடல்<br>கத்தோலிக்கம் | அதிவிசேடம்<br>சாதாரணம் |
| 9. | அனுஸ்கா வாசுதேவன் | தமிழ், கணிதம், சமயம்<br>சுற்றாடல் | அதிவிசேடம்<br>சாதாரணம் |
| 10. | மேஷா சுவாமிதாசன் | தமிழ், கணிதம், சுற்றாடல், கத்தோலிக்கம் | சாதாரணம் |

## தரம் 3

| இல | மாணவர் பெயர் | விடயம் | நிலை |
|---|---|---|---|
| 1. | விஜயதாஸ் டேமிஜன் | சுற்றாடல், கத்தோலிக்கம்<br>தமிழ், கணிதம் | அதிவிசேடம்<br>விசேடம் |
| 2. | ஜெயராசரகன் திகாஷ் | தமிழ், சுற்றாடல், கத்தோலிக்கம் | விசேடம் |
| 3. | நாகேந்திரவேல் கரிஸ் | தமிழ், கணிதம், சுற்றாடல், கத்தோலிக்கம் | விசேடம் |
| 4. | கேஷனா திருலங்கன் | தமிழ், கணிதம், சமயம்<br>ஆங்கிலம் | அதிவிசேடம்<br>விசேடம் |
| 5. | டன்சினி பத்மறாஜன் | தமிழ், சுற்றாடல், கத்தோலிக்கம், கணிதம் | அதிவிசேடம் |
| 6. | மேரி அபிஷா ஜீவராசா | தமிழ், கத்தோலிக்கம் | விசேடம் |

### சாதாரண பரிசு பெறுவோர்

7. றமேஸ் பெர்னான்டோ லிபிஷன்
8. ஜெயராசகடோட்சன் ரிஷிகாந்
9. அன்ரன் அன்ரனிரெனிஸ்ரன்
10. சகாயரூபன் அபிநாஸ்
11. யனுசியா றோகான்ஸ்ரனின்
12. நிகேமியா ஒகஸ்ரீன் அருண்
13. பதுஷாகினி சசிதரன்
14. டினோசியா சசிகரன்
15. எக்சிபா தனுபாலன்
16. கார்த்திகா திபாகரன்

## தரம் 4

| இல | மாணவர் பெயர் | விடயம் | நிலை |
|---|---|---|---|
| 1. | வசிதரன் மேதையன் | தமிழ், கணிதம், ஆங்கிலம், சுற்றாடல், சமயம் | அதிவிசேடம் |
| 2. | கந்தசீலன் அஸ்வின் | கணிதம்<br>தமிழ் | அதிவிசேடம்<br>விசேடம் |
| 3. | அன்ரனிடிபோல் யூட்கமிலஸ் | தமிழ், கணிதம் | விசேடம் |
| 4. | ரசிகுமார் கில்பேட் | தமிழ், கணிதம் | விசேடம் |
| 5. | டாறியஸ் டனுஜன்ராஜ் | கத்தோலிக்கம் | விசேடம் |
| 6. | சாருகா குணபாலசிங்கம் | தமிழ், கணிதம், ஆங்கிலம், சுற்றாடல், சமயம் | அதிவிசேடம் |
| 7. | யஷ்மிகா லிங்கப்பிரதாப் | கத்தோலிக்கம்<br>தமிழ், கணிதம், சுற்றாடல் | அதிவிசேடம்<br>விசேடம் |
| 8. | அஸ்வினி அமுதின குமார் | தமிழ், கணிதம், சுற்றாடல், சமயம் | விசேடம் |
| 9. | மயூரி றொனால்ட் நீகன் | தமிழ், கணிதம் | விசேடம் |

## சாதாரண பரிசு பெறுவோர்

10. திவ்வியராசா டனுஸ்ராஜன்
11. வின்சன் நோயஸ் றயந்தன்
12. மிக்றறின் மேரி ரமேஸ் பெர்னான்டோ
13. கயல்விழி அபிதரன்
14. டன்சியா இராசேந்திரன்
15. மேரி சயந்தா சரண்ராஜ்
16. ஒசானா ஜெயக்குமார்
17. தனுப்பிரியா விஜயரத்தினம்
18. அனோசியா அன்ரன் றொபேட்

# தரம் 5

| இல | மாணவர் பெயர் | விடையம் | நிலை |
|---|---|---|---|
| 1. | சலோசியஸ் அருள்சீலன் கலிஸ்ரன் | தமிழ், கணிதம், சுற்றாடல், கத்தோலிக்கம் | அதிவிசேடம் |
| 2. | வேணுஜன் ஜெரோஸ் | கணிதம் | விசேடம் |
| 3. | மரிய லோஜினி பீலிஸ் | கணிதம்<br>கத்தோலிக்கம் | அதிவிசேடம்<br>விசேடம் |
| 4. | மேரி அமலினா அன்ரனி பிரான்சிஸ் | கணிதம்<br>கத்தோலிக்கம் | அதிவிசேடம்<br>விசேடம் |
| 5. | மேரி ஜெனோஜினி குமார் பொனிபஸ் | கத்தோலிக்கம் | விசேடம் |
| 6. | லிர்சாயினி யதுசனா ஆனந்தகுமார் | கத்தோலிக்கம் | விசேடம் |

## சாதாரண பரிசு பெறுவோர்

7. நடராசா குபேரன்
8. இரகுநாதன் தனுசன்
9. மரியதாஸ் மேர்வின் சில்வா
10. தவராஜா பிரகாஷ்ராஜ்
11. பெசலம் நேசராஜ்
12.அமலதாஸ் விதுசாந்
13. டீபன் தினோஜன்
14. குணேஸ்வரன் லிபேசன்
15. சகாஜரூபன் அபிலாஸ்
16. அமுதினகுமார் அனோஜன்
17. டர்சிகா ரஜீபன்
18. மதுமிதா அன்ரனி பெர்னாண்டோ
19. எமிலியா அன்ரனி பயஸ்
20. சாபிஜா ஜெராட்

## Best Xaverian Award



Mas. Salosiyas Arulseelan Kalistan

## Students of the Year



Miss Kingshajiny Deeban
Grade - 1



Mas naagenthiravel Sham
Grade - 2



Miss Keshana thirulangan
Grade - 3



miss Sharuga Gunapalasingam
Grade - 4



Mas. Salosiyas Arulseelan Kalistan
Grade - 3



தரம் 1 மாணவர்கள்

## புலமைப் பரிசில் பரீட்சையில்
## 70 புள்ளிகளிற்கு மேல் பெற்றுக் கொண்டோர் - 2017

| | மாணவர் பெயர் | புள்ளிகள் |
|---|---|---|
| 1. | சலோசியஸ் அருள்சீலன் கலிஸ்ரன் | 153 |
| 2. | மேரி அமலினா அன்ரனி பிரான்சிஸ் | 122 |
| 3. | மரிய லோஜினி பீரிஸ் | 102 |
| 4. | நடராசா குபேரன் | 98 |
| 5. | வேணுஜன் ஜெரோஸ் | 96 |
| 6. | மேரி ஜெனோஜினி குமார் பொனிபஸ் | 90 |
| 7. | டர்சிகா ரஜீபன் | 75 |
| 8. | மரியதாஸ் மேர்வின் சில்வா | 74 |

### கூடிய புள்ளிகளைப் பெற்றுக்கொண்ட மாணவருக்கான பரிசு

சலோசியஸ் அருள்சீலன் கலிஸ்ரன்

*(இப்பரிசு புங்குடுதீவு புனித சவேரியார் பிரான்ஸ் ஒன்றியத்தால் அன்பளிப்பு செய்யப்பட்டது)*

## செயற்பட்டு மகிழ்வோம் போட்டியில் கலந்து கொண்ட மாணவர்களக்கான பரிசு

1. சலோசியன் அருள்சீலன் கலிஸ்ரன்
2. நடராசா குபேரன்
3. இரகுநாதன் தனுசன்
4. தவராசா பிரகாஷ்ராஜ்
5. மரியதாஸ் மேர்வின் சில்வா
6. குணேஸ்வரன் லிபேசன்
7. அமலதாஸ் லிதுசாந்
8. சகாயரூபன் அபிலாஸ்
9. மரியலோஜினி பீலீஸ்
10. மேரிஜெனோஜினி குமார் பொனிபஸ்
11. லிர்சாயினி யதுசனா ஆனந்தகுமார்
12. எமிலியா அன்ரனி பயஸ்

### கலாசார அலுவல்கள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட 2017ம் ஆண்டிற்கான தேசிய கலை இலக்கியப் போட்டி. சிறுவர் பிரிவிற்கான கையெழுத்துப்போட்டியில் வெற்றியீட்டிய மாணவிக்கான பரிசு

| | | பிரதேச மட்டம் | மாவட்ட மட்டம் |
|---|---|---|---|
| **சாருகா குணபாலசிங்கம் -** | ஆங்கில உறுப்பெழுத்து (My Pet Parrot) | 1ஆம் இடம் | 3ஆம் இடம் |
| | சிங்கள உறுப்பெழுத்து (මගේ අම්මා) | 1ஆம் இடம் | 1ஆம் இடம் |

## வரவொழுங்கு மாணவர்களுக்கான பரிசில்கள்

| | | |
|---|---|---|
| 1. | தரம் 1 | கஜேந்தினி ஜீவரூபன் |
| 2. | தரம் 2 | அகிலேஸ்வரன் கபில்ரன் |
| 3. | தரம் 3 | கேஷனா திருலங்கன் |
| 4. | தரம் 4 | சாருகா குணபாலசிங்கம் |
| 5. | தரம் 5 | நடராசா குபேரன் |

## இவ் ஆண்டின் (2017) சிறந்த மாணவர்களுக்கான பரிசில்கள்

| | |
|---|---|
| தரம் - 01 | கிங்ஷாயினி டீபன் |
| தரம் - 02 | நாகேந்திரவேல் ஷாம் |
| தரம் - 03 | கேஷனா திருலங்கன் |
| தரம் - 04 | சாருகா குணபாலசிங்கம் |
| தரம் - 05 | சலோசியஸ் அருள்சீலன் கலிஸ்ரன் |

# Best Xaverian Award - 2017

### சலோசியஸ் அருள்சீலன் கலிஸ்ரன்








"வளர்பிறை"
(ICOF)
OMI - MISSIO Partnership

